1972 சனவரி 24]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலகத்தில் மேலாளர் என்ற பதவி இல்லை.

(ஆ) & (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, சென்னையில் அறநிலைய அலுவலகத்தில், பல ஆண்டுக் காலமாக அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் கீழ் மட்டத்தில் உள்ள அலுவலர்களுக்கு மேல் உயர்வு கிடைக்காமல் இருக்கிறது. அதை அரசு உடனடியாக கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சென்னை அறநிலையப் பாதுகாப்பு அலுவலகத்தில் மேலாளர் என்பதற்குப் பதில், கண்காணிப்பாளர் என்று இருக்கிறார்கள். ஆகவே, கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு மேல் பதவி உயர்வுக்கு வழி இருக்கிறது. மேலும் தேவையில்லை.

Temple Funds.

"29. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Government have examined the suggestion of the East Thanjavur District Development Council for utilising the temple funds for improving sanitary facilities to the people?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அத்தகைய கருத்து கிடைக்கப் பெறவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, may I know whether the Thanjavur District Development Council has recommended the utilisation of all religious funds for this purpose or only the Hindu temple funds for this purpose?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சிக் குழுவிடமிருந்து தகவல் அம்மாதிரி இந்த அலுவலகத்திற்கு வரவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று மாவட்ட ஆட்சியாளர் அவர்களைக் கேட்டதில், அப்படித் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்ற பதில் அளித்திருக்கிறார்கள்.

***30 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறநிலையத்துறையின் சார்பில் மாவட்டந்தோறும் உயர்நிலைப்பள்ளிகளை துவக்குகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]